**வன்முறையால் பாதிக்கப்பட்ட பிராந்திய துரித (சீஏஆர்ஈ) - கூறு - ஏ செயற்திட்டம் - 2014**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

வன்முறையால் பாதிக்கப்பட்ட பிராந்திய துரித (சீஏஆர்ஈ) - கூறு - ஏ செயற்திட்டத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட 2626-எஸ்ஆர்ஜ இலக்க 2010 யூன் 07 ஆந் திகதிய கடன் உடன்படிக்கையின் பட்டோலை 2 இன் பிரிவு II பீ உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள், நிதியளித்தல், காலப்பகுதி என்பன

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அப்போதைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு நிறைவேற்று முகவராக உள்ளதுடன் வடமாகாண சபை, வட மத்திய மாகாண சபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பன செயற்திட்டத்தின் அமுல்படுத்தும் முகவர்களாகவும் உள்ளன. வன்முறையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் முன்னேற்றகரமான வாழ்வாதாரம், பொருளாதார உட்கட்டமைப்பு, நிர்வாக மற்றும் சட்ட சேவைகள் என்பவற்றை மீளமைத்து முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் கூறு ''ஏ'' இன் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 8,992.42 மில்லியனுக்குச் சமமான யூஎஸ்டொலர் 69.59 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 8,005.18 மில்லியனுக்குச் சமமான யூஎஸ்டொலர் 61.95 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 யூன் 07 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2013 யூன் 30 அளவில் பூர்த்திசெய்வதற்குப் பட்டியல் படுத்தப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்வதற்கான திகதி 2014 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

---

### 2.1. அபிப்பிராயம்

---

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

நிதி திட்டமிடல் அமைச்சின் எம்ஓஎவ்பீ/ஈஆர்டீ/20007/2 ஆம் இலக்க 2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எனினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு 2016 சனவரி 28 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வில் பின்வரும் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2007 ஏப்ரல் 25 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 33 ஆம் இலக்க சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கு முரணாக செயற்திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்களுக்கு

மீளாய்வாண்டின் போது ரூபா 11.17 மில்லியன் கூட்டு மொத்த மிகையூதியங்களானது வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட சூத்திரத்தின் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) செயற்திட்டத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்கள் 2007 ஏப்ரல் 05 ஆந் திகதிய 33 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 5.4 ஆம் பந்தியின் பிரகாரம் ஏனைய படிகளுக்கு தகைமையற்றவர்களாக இருந்த போதிலும் செயற்திட்டத்தினால் மருத்துவ கோரல்களின் மீளளிப்புக்களாக ரூபா 240,685 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மற்றும் பௌதீகச் செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

மீளாய்வாண்டின் போதும் 2014 திசெம்பர் 31 வரையும் நிதியளிப்பு மற்றும் நிதிகளின் பயன்பாடு தொடர்பான குறித்த சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | பயன்படுத்திய நிதிகள் 2014 ஆம் ஆண்டின் போது | | பயன்படுத்திய நிதிகள் 2014 திசெம்பர் 31 வரை | |
|---|---|---|---|---|---|---|
| | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | யூஎஸ் டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடீபீ | 61.95 | 8,005.18 | 14.26 | 1,842.73 | 61.37 | 7,930.06 |
| ஜிஓஎஸ்எல் | 7.64 | 987.24 | 1.45 | 186.76 | 6.63 | 856.37 |
| மொத்தம் | 69.59 | 8,992.42 | 15.71 | 2029.49 | 68.00 | 8,786.43 |

### 3.2 பௌதீகச் செயலாற்றல்

செயற்திட்ட காலத்தின் போது 39 ஒப்பந்தப் பொதிகளின் கீழ் வட மாகாணம் மற்றும் வடமத்திய மாகாணத்திலுள்ள 265 கிலோமீற்றர் மாகாண வீதிகளைப் புனரமைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. அதில் 37 ஒப்பந்தப் பொதிகளின் கீழுள்ள மாகாண வீதிகளைப் புனரமைக்கும் வேலைகள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மேலும் 27 ஒப்பந்த தொகுதிகளின் கீழான புனரமைப்பு வேலைகள் 01 மாதத்திலிருந்து 16 மாதங்கள் வரையான வீச்சுடைய காலதாமதங்களுடன் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

-------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வழமையாக வேலைகளின் பரப்பெல்லைகளின் முரண்களானவை சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளின் நிறுவனங்களின் உத்தியோகத்தர்களால் அல்லது செயற்திட்டப் பணிப்பாளர்களால் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆகவே, வடமத்திய மாகாணத்தின் 04 வீதிப் பொதிகளின் கீழுள்ள வடமத்திய மாகாணத்தின் வீதிப் புனரமைப்பு வேலைகளின் மதிப்பிடப்பட்ட கிரயத்திற்கு மிகையாக ரூபா 13 மில்லியன் கூட்டு மொத்தமான முரண்களும் வடமாகாணத்தில் 33 வீதிப் பொதிகளின் புனரமைப்பு வேலைகளின் மதிப்பிடப்பட்ட கிரயத்திற்கு மிகையாக ரூபா 828 மில்லியன் கூட்டு மொத்தமான ஏனைய முரண்களும் அதிகாரமளிக்கப்பட்ட தரப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) மேலும் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிகளின் கீழ் 8.14.1 ஆம் பந்திக்கு முரணாக வடமாகாணத்திலுள்ள 05 மாகாண வீதிகளின் புனரமைப்பு தொடர்பாக ஆரம்பத்தில் இனங்காணப்பட்ட பூர்த்திசெய்தல் காலத்தை மிகைத்து 243 நாட்களிலிருந்து 445 நாட்கள் வரையான வீச்சுடைய கால நீடிப்புக்கள் தகுந்த காரணமின்றி செயற்திட்ட பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

(இ) வீதிப் புனரமைப்பு வேலைகளைப் பூர்த்திசெய்து 07 நாட்களுக்குள் கையளிக்குமாறு வேண்டப்பட்ட செயற்திட்டத்தினால் புனரமைப்புச் செய்யப்பட்ட 02 வீதிகளானவை ஒப்பந்த நிபந்தனையின் 10 ஆம் உறுப்புரைக்கு முரணாக 200 நாட்களுக்கு மேற்பட்ட காலதாமதத்துடன் வடமாகாண சபையின் மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மேற்கொள்ளப்பட்ட வீதிப் புனரமைப்பு வேலைகளின் தரமின்மையின் காரணமாக மாங்குளம் - வெள்ளாங்குளம் வீதி, அக்கராயன் குளம் - வன்னேரிக்குளம் வீதி, கொக்காவில் - துணுக்காய் வீதி என்பவற்றில் பல இடங்களின் வீதி மேற்பரப்புக்களில் வெடிப்புக்கள் காணப்பட்டமையானது 2016 மார்ச் 16 இலிருந்து 28 வரை கணக்காய்வாளர்களால் மேற்கொண்ட வேலைத்தள சமூகமளிப்பில் பரீட்சிக்கப்படாது மேலும் துணுக்காயிலிருந்து தென்னியம் வரையான வீதியின் மருங்கில் பொருத்தப்பட்ட வீதி வளைவு சமிக்ஞைப் பலகைகள் வீதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் முறையாகப் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சச்சரவுத் தன்மையான விடயங்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதியுரை உடன்படிக்கையின் பிரகாரம், ஒப்பந்தம் பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் மதியுரையாளரினால் பேணப்பட்ட மூல ஆவணங்கள் செயற்றிட்டத்திடத்திற்கு கையளிக்கப்படுதல் வேண்டும். எனினும் செயற்றிட்டத்தின் பூர்த்திசெய்யப்பட்ட வேலைகள் சம்பந்தமான தொடர்பாடல் கோவைகளையும் மூல ஆவணங்களையும் கையளிக்குமாறு செயற்திட்ட பணிப்பாளர் பல தடவைகள் வேண்டுதல்கள் விடுத்திருந்த போதிலும் மதியுரையாளரினால் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வவுனியா மற்றும் கிளிநொச்சியிலுள்ள வதிவிடங்களுக்கான புனரமைப்பு வேலைகள் வீதிப்புனரமைப்பு வேலைகளின் நோக்கெல்லையில் உள்ளடக்கப்படாத புனரமைப்பு வேலைகளாக இருந்த போதிலும் செயற்திட்டத்தினால் ரூபா 4.2 மில்லியன் கிரயத்தில் புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(இ) பெறுமதி சேர் வரிக்கான பதிவுசெய்தல்கள் செல்லுபடியற்றதாகக் காணப்பட்ட 04 ஒப்பந்தக்காரர்களுக்கு செயற்திட்டத்தினால் ரூபா 17.78 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரிகள் செலுத்தப்பட்டிருந்தமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது.

## 4. செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை முடிவுறுத்துதல்

---

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2014 திசெம்பர் 31 இல் பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும் பௌதீக மெய்மையாய்வினை மேற்கொண்ட பின்னர் சம்பந்தப்பட்ட முகவராண்மைகளுக்கு 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான முடிவுறுத்தல் கணக்குகளையும் செயற்திட்ட பூர்த்தியாக்கல் அறிக்கைகளையும் தயாரிப்பதற்கும் பதிவேட்டுப் பொருள் விடயங்களை கையளிப்பதற்கும் செயற்திட்டத்தினாலும் நிறைவேற்று முகவராண்மையாலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.